# ஆம்பூர் நகராட்சி

## 2014-2015ம் ஆண்டு நிர்வாக அறிக்கை

### 1.தோற்றம் மற்றும் எல்லை

இந் நகராட்சி முதன் முதலில் பேரூராட்சியாக செயல்பட்டு வந்தது.பின்னர் 1.4.1948 முதல் மூன்றாம் நிலை நகராட்சியாக உருவாக்கப்பட்டு, பின் 12.3.1973ம் தேதிய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையின் அரசு ஆணை எண்.458-ன் படி 1.4.73 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டு பின் அரசாணை நிலை எண்.85, நாள்.22.5.08 முதல் முதல்நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டு பின்னர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (தேர்தல்)துறையின் அரசாணை எண்.238, நாள்.2.12.2008ன்படி தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு இயங்கி வருகிறது.

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சி எல்லைகளில் மாற்றம் எதுவும் இல்லை. இந்நகராட்சி கீழ்க்கண்ட வருவாய் கிராமங்களை கொண்டதாகும்.

1. சாணாங்குப்பம்
2. கஸ்பா
3. கிருஷ்ணாபுரம்

இந் நகராட்சியின் மொத்த பரப்பளவு 17.97 சதுர கிலோ மீட்டர் ஆகும். 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 1,13,856 ஆகும்.

### 2(அ) நகரமன்றம்

அறிக்கை ஆண்டில் 1.4.2014 முதல் 31.3.2015 வரை திருமதி.பி.சங்கீதா பாலசுப்பிரமணி அவர்கள் நகரமன்ற தலைவராக தொடர்ந்து இருந்து வருகிறார்.

### (ஆ) ஆணையாளர்

அறிக்கை ஆண்டில் திரு.எல்.குமார்.பி.இ. பொறியாளர் 01.04.2014 முதல் 28.09.2015 ஆணையாளர் பொறுப்பு வகித்து வந்தார்.29.09.2015 முதல் திருமதி.எஸ்.சசிகலா அறிக்கை ஆண்டு முடியும் வரை ஆணையாளராக பதவி வகித்தார்

### (இ) மேலாளர்

அறிக்கை ஆண்டில் திரு.எ.ஜெயபிரகாசம், 01.04.2014 முதல் 31.03.2015 வரை மேலாளராக பணியாற்றி வந்தார்.

### (ஈ). பொறியாளர்

இந் நகராட்சியில் அறிக்கை ஆண்டில் 01.04.2014 முதல் 31.3.2015வரை திரு.எல்.குமார், பி.இ. பொறியாளராக பணியாற்றியுள்ளார்.

## 3. தேர்தல்

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை அரசு ஆணை எண்.137, நாள்12.9.2011ன்படி நகரமன்ற தலைவர் பதவி பெண்களுக்காக(பொது) ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் மொத்தம் 36 வார்டுகள் உள்ளது. இதில் ஆதிதிராவிடர்களுக்கு வார்டுஎண்.7,12,13,27,33 என ஒதுக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு வார்டு எண்.2,8,14,15, 19,21,25,30,34,35 என ஒதுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 21 வார்டுகள் பொது வார்டுகளாக ஒதுக்கப்பட்டுள்ளது.

## 4. மன்ற கூட்டங்கள்

அறிக்கை ஆண்டில் திருமதி.சங்கீதா பாலசுப்பிரமணி அவர்கள் நகரமன்ற தலைவராக இருநது வருகிறார். அறிக்கை ஆண்டில் கீழ்கண்டவாறு மன்ற கூட்டம் நடைபெற்றுள்ளது.

| வ.எண். | கூட்டத்தின் தன்மை | கூட்டங்களின எண்ணிக்கை | பொருள்களின் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்டது |
|---|---|---|---|---|
| 1 | சாதாரண கூட்டங்கள் | 4 | 213 | 213 |
| 2 | அவசரக்கூட்டங்கள் | 3 | 62 | 62 |
| 3 | சிறப்புக் கூட்டங்கள் | 1 | 1 | 1 |
| | மொத்தம் | 8 | 276 | 276 |

## 5. குழுக்கள்

அறிக்கை ஆண்டில் கீழ்குறிப்பிட்டுள்ள குழுமங்கள் கூட்டப்பட்டுள்ளது.

| குழுமங்களின் தன்மை | கூட்டங்களின் எண்ணிக்கை | பொருள்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1.நியமனக்குழு | - | - |
| 2.ஒப்பந்தக்குழு | - | - |
| 3.வரி மேல்முறையீட்டுக்குழு | - | - |

## 6. பொது

அறிக்கை ஆண்டில் மொத்த வரவு ரூ.43,15,71,617/-
அறிக்கை ஆண்டில் மொத்த செலவு ரூ.40,47,84,514/-

## 7. நிர்வாகம்

அறிக்கை ஆண்டில் பணியாளர்களின் செலவு முறையே ரூ.5,38,12,578/-ஆகும். நியமனம் மற்றும் மற்ற இனங்களுக்காக விதிமுறைகள் கடைபிடிக்கப்பட்டது.

**8. பாலம்,சிறுபாலம் மற்றும் நெடுஞ்சாலை மற்றும் பொதுப்பணித்துறை**

இந் நகராட்சி வழியாக செல்லும், சென்னை-கள்ளிக்கோட்டை நெடுஞ்சாலை 5.80 கி.மீ.நீளத்திற்கு நெடுஞ்சாலை துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது.இந் நகராட்சியில் பராமரிக்கப்படும் மற்ற ரோடுகள் விவரம் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | சிமெண்ட் சாலை | 64.938 கி.மீ. |
| 2. | தார் சாலை | 41.402 கி.மீ. |
| 3. | கல் சாலை | - |
| 4. | கிராவல் சாலை | 2.260 கி.மீ. |
| | மொத்தம் | 108.600 கி.மீ. |

அறிக்கை ஆண்டில் சாலை பராமரிப்பிற்காக ரு2,76,17,419/--செலவிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் செலவு ரு.27472216/-ஆகும். அறிக்கை ஆண்டில் வண்டி வாகன வரி மூலமாக ஏதும் வசூலாகவில்லை. நகரில் முக்கிய சாலைகள் நல்ல நிலையில் உள்ளது.

**9. இலாகா கட்டிடங்கள், தங்கும் விடுதிகள் மற்றும் சத்திரங்கள்**

இந் நகராட்சியில் ஒரு தங்கும் விடுதி உள்ளது. வன இலாகா துறையினரால் இந் நகரில் ஒரு தங்கும் விடுதி பராமரிக்கப்படுகிறது.

**10. தளவாடங்களும், கருவிகளும்**

அறிக்கை ஆண்டில் பொது சுகாதாரப்பிரிவில் குப்பைகளை சேகரித்து அப்புறப்படுத்தும் பணிக்காக 3 டம்பர் பிளேசர் வாகனம், 2 டிப்பர் லாரி, மினி லாரி ஒன்று,அபி ஆட்டோ 2 மற்றும் (ஜே.சி.பி.ஒன்றும் பயன்படுத்தப்பட்டன.

**11. விளக்கு**

அறிக்கை ஆண்டில் நகராட்சி பராமரிப்பில் உள்ள தெருவிளக்குகள் விவரம்.

| | | |
|---|---|---|
| 1 | 40 வாட்ஸ் 4அடி குழல் விளக்கு | 2148 |
| 2 | 150 வாட்ஸ் பாதரச விளக்கு | 248 |
| 3 | 250 வாட்ஸ் சோடியம் ஆவிவிளக்கு | 206 |
| 4 | 70 வாட்ஸ் சோடியம் ஆவிவிளக்கு | 50 |
| 5 | சிஎப்எல்.விளக்குகள் | 180 |
| 6 | உயர்மின் கோபுர விளக்கு | 48 |
| 7 | சோலார் மின்விளக்கு | 4 |
| | மொத்தம் | 2884 |

வார்டு எண் 1 முதல் 23 வரை மற்றும் வார்டு எண்.30 ஆகிய 24 வார்டுகள் தனியார் மூலம் தெருவிளக்கு பராமரிப்பு செய்யப்படுகிறது. மீதமுள்ள 12 வார்டுகள் நகராட்சி பணியாளர்கள் மூலம் பராமரிக்கப்படுகிறது.

## 12. கல்வி

1.4.85 முதல் இந் நகராட்சியில் ஆரம்ப கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந் நகரில் மொத்தம் 21 ஆரம்ப பள்ளிகள் உள்ளன. நகராட்சி பராமரிப்பில் 4 நடுநிலைப்பள்ளிகள் மற்றும் 7 ஆரம்பபள்ளிகள் அரசு உத்திரவின்படி மாதனூர் உதவி கல்வி அலுலரின் பராமரிப்பில் செயல்பட்டு வருகிறது.

## 13.பள்ளிகள்

மொத்தம் 4 நடுநிலைப்பள்ளிகள் மற்றும் 7 ஆரம்ப பள்ளிகள் இயங்கி வருகின்றன.அவற்றில் 9 பள்ளிகள் நகராட்சி சொந்த கட்டிடத்திலும், 2 ஆரம்பப்பள்ளிகள் வாடகை கட்டிடத்திலும், நடத்தப்படுகிறது. அறிக்கை ஆண்டில் பள்ளி கட்டிடம் வாடகைக்காக ரூ.1,86,000/- செலவிடப்பட்டது.

## 14. அ. ஆரம்ப கல்வி நிதி

அறிக்கை ஆண்டில் கல்வி வரி கீழ்கண்டவாறு விதிக்கப்பட்டு கட்டிட ஆண்டு வாடகை மதிப்பில் அரையாண்டிற்கு 2.5 சதவிகிதமும், காலிமனை வரியில் உள்ள கல்வி வரி சொத்து வரியில் 34 சதவிகிதமும் விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டது.

## ஆ.முதியோர் கல்வி

அறிக்கை ஆண்டில் நகராட்சியால் முதியோர் கல்வி பள்ளிகள் ஏதும் நடத்தப்படவில்லை.

## 15. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவு திட்டம் ( 2 வயது முதல் 4 வயது வரை )

ஆம்பூர் நகரில் 2 வயது முதல் 4 வயது வரைக்கான பிள்ளைகளுக்கு சத்துணவு மையங்கள் ஒருங்கிணைந்த குழந்தைகள் நல அலுவலகத்தின் மூலம் 38 மையங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

## 16. புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவு திட்டம் 5 வயது முதல் 9 வயது வரை

இந் நகராட்சி பள்ளிகளில் நடத்தப்படும் 5 முதல் 9 வயது வரை உள்ள பள்ளி பிள்ளைகளுக்கு சத்துணவு திட்டத்தின் கீழ், 9 மையங்கள் நகராட்சி பராமரிப்பில் உள்ளன. அவற்றில் தினசரி பிள்ளைகள் வேலை நாட்களில் 1164 பேர், பயனடைகிறார்கள்.

அறிக்கை ஆண்டில் சத்துணவு பணியாளர்களுக்கான ஊதியம் ரூ.1702932/- வழங்கப்பட்டுள்ளது. அரசு மான்யமாக வழங்கும் தொகையிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படுகிறது.

**17. உயர்நிலைப்பள்ளிகள்**

இந் நகராட்சியில், உயர்நிலைப்பள்ளிகள் ஏதும் நடத்தப்படவில்லை. அறிக்கை ஆண்டில் 5 தனியார் உயர்நிலைப்பள்ளிகளும் 6 தனியார் மேல்நிலைப் பள்ளிகளும், ஒரு அரசினர் மேல்நிலைப்பள்ளியும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**18. பிரத்யேக பள்ளிகள் பொது வாசகசாலை**

இந் நகராட்சி பிரத்யேக பள்ளிகளோ அல்லது பொது வாசக சாலையோ நடத்தவில்லை. மாவட்ட நூலக நிர்வாகத்தின் கீழ், ஒரு கிளை நூலகம் ஆம்பூர் நகரில் செயல்பட்டு வருகிறது.

**19. படிப்பகம்**

அலுவலக கட்டிடத்திற்குள் படிப்பகம் ஏதும் இல்லை.

**20. பொது சுகாதாரம் - பணியாளர்கள்**

இந் நகராட்சியில் நகர் நல அலுவலர் பதவி இல்லை. இந் நகராட்சியில் ஒரு துப்புரவு அலுவலர் பணியிடமும் ஐந்து துப்புரவு ஆய்வாளர் பணியிடமும் உள்ளது. அறிக்கையாண்டில் மூன்று துப்புரவு ஆய்வாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

**21. மருத்துவமனை**

நகராட்சியில் நகர் நல மையம் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் ஆசனாம்பட்டு ரோடில் இயங்கி வருகிறது. மருத்துவமனையும், நடந்து வருகின்றது, நகரில் அரசினர் மருத்துவமனை ஒன்று உள்ளது. இதில் சித்த வைத்தியப்பிரிவும், இணைக்கப்பட்டுள்ளது. இ.எஸ்.ஐ. மருத்துவமனையும், ஒன்று உள்ளது. பெதஸ்தா என்ற தனியார் மருத்துவமனையும் ஒன்று தனியாரால் நடத்தப்பட்டு வருகிறது.

**22. பிறப்பு விகிதமும், மகப்பேறும்**

அறிக்கை ஆண்டில் பிறப்பு, இறப்பு பதிவுகளை கவனிக்க மூன்று துப்புரவு ஆய்வர்கள் உள்ளார். இவ்வாண்டில் 1900 பிறப்புகள் பதிவு செய்ப்பட்டு உள்ளன. ஆண்டு பிறப்பு விகிதத்தில் ஒரு ஆயிரத்திற்கு 15.39 சதவிகிதம் ஆகும். இந் நகராட்சியில் 4 மகப்பேறு உதவியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். மற்றும் 4 மகப்பேறு ஆயா பணியிடம் உள்ளது. 1 மகப்பேறு ஆயா பணிப்புரிந்து வருகின்றனர், 3 மகப்பேறு ஆயா பணியிடம் காலியாக உள்ளது.

**23. இறப்பு விகிதம் (ம) கொள்ளை நோய்**

இவ்வாண்டில் பதிவு செய்யப்பட்ட மொத்த இறப்பு 898 ஆகும். சென்ற ஆண்டு 888 ஆகும். இறப்பு விகிதம் ஒரு ஆயிரத்திற்கு 7.17 சதவிகிதம் ஆகும். கீழ்க்கண்ட காரணங்களுக்காக இறப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | காலரா | இல்லை |
| 2. | ஜீரம் | - |
| 3. | சீதபேதி | - |
| 4. | காசநோய் | 1 |
| 5. | இதர நோய்கள் | 752 |

**ஈமச்சடங்கு உதவித் தொகை**

06.08.97ம் தேதிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசாணைஎண். 144-ன்படி ஆண்டுக்கு ரூ.24,000/-க்குள் குறைந்த வருவாய் உள்ள ஷெட்யூல் வகுப்பு மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர் மரபினர் இறந்துவிட்டால் அவர்களின் ஈமச்சடங்கிற்கு ரூ.2500/- மற்றும் ரூ.500/- வழங்கும் திட்டம் உள்ளது. அதன்படி அறிக்கை ஆண்டில் ரூ.3,45,000/- வழங்கப்பட்டு உள்ளது. மானியமாக அறிக்கை ஆண்டில் ரூ.1,50,000/-பெறப்பட்டுள்ளது. மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் ஈமச்சடங்கு உதவித்தொகை மானியம் நடப்பு ஆண்டில் பெறப்படவில்லை. ஆனால் உதவித்தொகை ரூ.2500/-மற்றும் ரூ.500/- நடப்பாண்டில் வழங்கப்பட்டது.

**24.பெரியம்மை**

அறிக்கை ஆண்டில் நகரில் பெரியம்மை இல்லை.

**25. மலேரியா**

அறிக்கை ஆண்டில் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் எவரும் இல்லை.
இத் திட்டத்தின் கீழ், களப்பணி உதவியாளர் பணியிடம் 17.01.2014 முதல் நியமனம் செய்யப்பட்டு பணி செய்து வருகிறார். மேற்படி திட்டத்திற்காக 2 பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

புகைபோக்கி இயந்திரம் பெரியது ஒன்று சிறியது 13 கொண்டு நகரின் அனைத்து பகுதிகளிலும் கொசுக்களை அழிக்க பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**26.பிளேக் நோய்**

அறிக்கை ஆண்டில் நகரில் பிளேக் நோய் இல்லை.

**27.துப்புரவு (அ) சுகாதார பணி**

தெருக்களில் உள்ள குப்பைகளை டிராக்டர், டிரெய்லர், மினிலாரி, சைக்கிள் ரிக்ஷா, டம்பர் பிளேசர் லாரி, டிப்பர் லாரிகள் மூலம், உரக்கிடங்கிற்கு அனுப்பப்படுகின்றன. அறிக்கை ஆண்டில் பொது சுகாதாரத்துறைக்கு தேவையான உபகரணங்கள் அவ்வப்போது வாங்கி வழங்கப்பட்டது.

## திடக்கழிவு மேலாண்மை

20.03.2012 முதல் வார்டு எண். 1, 2, 3, 7, 8, 9, 10, 15, 16, 17, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, மற்றும் 34 ஆகிய வார்டுகளிலும் தனியார்மயம் மூலம் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணிக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.8,26,320 செலவிடப்படுகிறது. மீதமுள்ள வார்டுகளில் நகராட்சி பணியாளர்கள் துப்புரவு பணி செய்து வருகிறார்கள்.

## 28 குப்பை விற்பனை

ஆம்பூர் நகராட்சியில் கலவை உரக்கிடங்கு ஆசனாம்பட்டு ரோடில் 3.19 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ளது. இதில் குப்பைகள் தற்போது கொட்டப்படுவது இல்லை. கலவை உரம் தயாரிப்பு இல்லை. எனவே விற்பனை இல்லை. கூடுதலாக 8.77 ஏக்கர் நிலம் தார்வழிப் பகுதியில் வாங்கப்பட்டு உள்ளது. புதியதாக வாங்கப்பட்ட நிலத்தில் குப்பைகள் பிரித்து உரம் தயாரிக்கும் வகையில் உள்கட்டமைப்பு பணிகள் செய்யப்பட்டுள்ளது. நிலம் வாங்குவதற்கு 19.45 லட்சம் செலவிடப்பட்டு உள்ளது. தற்போது குப்பைகள் அங்கு சேகரிக்கப்பட்டு வருகிறது.

## 29.சந்தைகளும், திருவிழாக்களும்

இந்நகராட்சியில் அறிவிக்கப்பட்ட சந்தைகளும் திருவிழாக்களும் இல்லை.

## 30. குடிநீர் விநியோகம்

இந் நகராட்சியில் பாதுகாக்கப்பட்ட முன்னோடி குடிநீர் திட்டம் 1.4.75 முதல் செயல்பட்டுவருகிறது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படுகிறது. வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகளும், பொது உபயோகத்திற்கு இணைப்புகளும், கொடுக்கப்பட்டு உள்ளது.

1.1.2007 முதல் எல்லா வீட்டு இணைப்புகளுக்கும் மீட்டர் கணக்கில் 8100 லிட்டர் வரை குறைந்து கட்டணம் ரூ.51/- வசூலிக்கப்பட்டு வருகிறது. வீடு அல்லாத உபயோகத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.101/- வசூலிக்கப்பட்டு வருகிறது.

இதன் மூலம் அறிக்கையாண்டில் நகராட்சி ரூ.16.60 லட்சம் வருவாய் வந்துள்ளது. இத்திட்டம் 5கி.மீ. தொலைவில் உள்ள பச்சகுப்பம் அருகே பாலாற்றில் உறிஞ்சு கிணறு மூலம் தண்ணீர் இறைக்கப்பட்டு நகரில் அமைக்கப்பட்டு உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மூலம் நகரில் பல இடங்களுக்கும் விநியோகம் செய்யப்பட்டு வந்தது.

தொழிற்சாலைகளில் உண்டாகும் கழிவுநீர் ஆற்றில் கலப்பதால் இக் குடிநீர் குடிக்க தரமற்ற நீராக மாறிப்போனதால் மேற்கண்ட தலைமை நீரேற்று நிலையம் செயல்பாட்டிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும்

1. வண்ணான்துறை
2. ஆணைமடுகு
3. சாரங்கல்
4. நரியம்பட்டு
5. நதிசீலாபுரம்
6. சாணிக்கணவாய் மேடு

ஆகிய இடங்களில் உள்ள கிணறுகளிலிருந்து குடிநீர் எடுக்கப்பட்டு குளோரின் கலக்கப்பட்டு தரமான குடிநீர் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் குடிநீர் விநியோக பைப்புகள் இல்லாத பகுதிகளுக்கு தனியார் டிராக்டர்கள் மூலமும், நகராட்சி குடிநீர் லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. நகராட்சி வார்டுகள் பகுதி வாரியாக 4 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு 67.82லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது. வழங்கப்படும் குடிநீர் வாரம் ஒரு முறை தர பரிசோதனை செய்யப்பட்டு குடிநீரின் தரம் கண்காணிக்கப்படுகிறது.

மேலும், வேலூர் மாவட்ட கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ், ஆம்பூர் நகராட்சி பகுதிகளுக்கு காவேரி கூட்டு குடிநீர் வழங்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் திட்டம் தயார் செய்யப்பட்டு திட்ட நடவடிக்கைகள் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட திட்டம் முடிக்கப்பட்டால், ஆம்பூர் நகர மக்களுக்கு நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 90 லிட்டர் குடிநீர் வழங்க இயலும் என தெரிவிக்கப்படுகிறது.

**அ. வசூலிக்க கூடிய இனங்கள் குடிநீர் கட்டணம்**

குடிநீர் கட்டணம் நிலுவைத்தொகை 62.55இலட்சத்தில் 8.49லட்சம் வசூலிக்கப்பட்டு 14% அடையப்பட்டுள்ளது. நடப்பு கேட்பு 22.99% ரூ.இலட்சத்தில் 8.11 இலட்சம் வசூலிக்கப்பட்டு 35.27% அடையப்பட்டுள்ளது.

**ஆ.அரசு கட்டிடங்கள்:**

குடிநீர் கட்டணம் நிலுவைத்தொகை 1.19 இலட்சத்தில் 0.04இலட்சம் வசூலிக்கப்பட்டு 3 சதவிகிதம் முடிக்கப்பட்டு குடிநீர் கட்டணம் நடப்பு கேட்பு 0.09 இலட்சத்தில் 0.04 இலட்சம் மட்டுமே வசூலிக்கப்பட்டு 20 சதவிகிதம் முடிக்கப்பட்டுள்ளது.

**1. பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2014-15**

மேற்படி திட்டத்தின் கீழ் ரூ.9.00லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதில், 3 எண்ணிக்கை உயர்கோபுர மின் விளக்குகள் அமைத்தல் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு நிதி முழுவதும் செலவிடப்பட்டுவிட்டது.

**2 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2014-15**

மேற்படி திட்டத்தின் கீழ் ரூ.28.60லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதில், ரூ.18.60 இலட்சம் மதிப்பீட்டில் 7 எண்ணிக்கை புதியதாக ஆழ்துளை கிணறுகள் அமைத்து மினிபவர் பம்ப் பொருத்தி HDPE டேங்க் அமைத்தல் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு ரூ.18.60லட்சம் செலவிடப்பட்டுவிட்டது. மேலும் தலா ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டில் இரண்டு எண்ணிக்கை அங்கன்வாடி மைய கட்டிடங்கள் கட்டுதல் பணிகள் எடுத்துக் கொள்ளப்படடு ஒரு பணி முடிக்கப்பட்டுவிட்டது. மீதம் ஒரு பணி நடைபெற்று வருகிறது.

**3.தன்னிறைவு திட்டம். 2014-15**

மேற்படி திட்டத்தின் கீழ் பொதுமக்கள் பங்களிப்பு தொகையாக ரூ.32.10லட்சம் பெற்றும், அரசு நிதி ரூ.64.20லட்சம் பெற்றும் மொத்தம் ரூ.96.30லட்சம் மதிப்பீட்டில் 39 எண்ணிக்கை புதியதாக ஆழ்துளை கிணறுகள் அமைத்து மினிபவர் பம்ப் பொருத்தி HDPE டேங்க் அமைத்தல் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு ரூ.96.30லட்சம் செலவிடப்பட்டுவிட்டது.

**4. வறாட்சி நிவாரண திட்டம். 2014-15**

மேற்படி திட்டத்தின் கீழ் ரூ.15.00லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டதில் ரூ.17.10 லட்சம் மதிப்பீட்டில் 13 எண்ணிக்கை புதியதாக ஆழ்துளை கிணறுகள் அமைத்து மினிபவர் பம்ப் பொருத்தி HDPE டேங்க் அமைத்தல் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு ரூ.17.10லட்சம் செலவிடப்பட்டுவிட்டது.

**5. அம்மா உணவகம்**

ஆம்பூர் நகராட்சியில் அம்மா உணவகம் அமைக்க ரூ.25.00லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டதில் நகராட்சி புதிய பேருந்து நிலைய வளாகத்தில் அம்மா உணவகம் அமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

**6. உள்கட்டமைப்பு இயக்குதல் & பேணுதல் இடைவெளி நிரப்புதல் நிதிதிட்டம். 2014-15**

மேற்படி திட்டத்தின் கீழ் அரசு நிதியாக ரூ.70.00லட்சமும், நகராட்சி பங்குத் தொகையாக ரூ.15.00 லட்சமும், ஆக மொத்தம் ரூ.85.00 லட்சம் மதிப்பீட்டில், நகராட்சி அலுவலக முதல் தளத்தில் கூடுதல் அலுவலக கட்டிடம் கட்டுதல் பணி எடுத்துக் கொள்ளப்பட்டு தற்போது பணி நடைபெற்று வருகிறது.

**7. வருவாய்நிதி 2014-15**

இந் நகராட்சியில் அறிக்கை ஆண்டில் வருவாய் நிதியின் கீழ் 63 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு ரூ.214.20லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**32. துப்புரவு தொழிலாளர் குடியிருப்பு**

இந் நகராட்சி துப்புரவு தொழிலாளர்கள் நகரில் பல பகுதிகளில் வசித்து வருகின்றனர். அவர்களுக்கு நகராட்சி குடியிருப்புகள் கட்டித்தரப்பட்டது.ஆனால் இதில் எவரும் வசிக்கவில்லை. துப்புரவு தொழிலாளர்களுக்கு அரசு நிர்ணயித்த சம்பள விகிதத்தில் அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, கொடுக்கப்பட்டுவருகிறது. மேலும் அவர்களுக்கு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் மாதம் ஒருமுறை மருத்துவ பரிசோதனை செய்யப்படுகிறது.

ஆம்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட சாமியார்மடம் பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான 1.24 ஏக்கர் நிலப்பரப்பில் 100 துப்புரவுப்பணியாளர்களுக்கு குடியிருப்பு மறுவாழ்வு திட்டத்தின் கீழ், சேலம் கோட்டம் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம் புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கு அனுமதி கோரி இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.2986/06/எச்1, நாள்.8.3.07ல்

நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு உரிய பிரேரணைகள் அனுப்பப்பட்டுள்ளது. உரிய அனுமதி கிடைக்கப்பெற்றதும் குடியிருப்புகள் கட்டுவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

## 33. பொது கழிப்பிடங்கள்

அறிக்கை ஆண்டில் பதிமூன்று கழிப்பிடங்கள் உபயோகத்தில் இருந்தது. சிறந்த முறையில் பராமரிக்கப்படுகிறது.

1. சான்றோர்குப்பம் ஆதிதிராவிடர் காலனி
2. வி.ஏ.கரீம் சாயபு தெரு
3. கஸ்பா.பி.நகராட்சி பள்ளி அருகில்
4. கஸ்பா.பி.5வது வீதி எதிரில்
5. சோமலாபுரம் ரோடு
6. துரைசாமி ராஜா தெரு
7. கஸ்பா.அ.மெயின் ரோடு
8. கட்டைமேடு (பாவேந்தர் தெரு)
9. பன்னீர் செல்வம் நகர்
10. அழகாபுரி
11. சுண்ணாம்புக்காளை
12. கம்பிக்கொல்லை
13. நதிசீலாபுரம்
14. மளிகைதோப்பு
15. சான்றோர்குப்பம்
16. சாமியார்மடம் ரோடு
17. பேருந்துநிலையம்
18. கெங்காபுரம்
19. எஸ்.கே.ரோடு (கானாறு அருகில்)
20. சான்றோர்குப்பம் (ஏரிகோடி)

## 34. வீட்டுக்கழிப்பிடங்கள்

புதியதாக குடியிருப்பு கட்டிடம் கட்ட அனுமதி கோரி கட்டிட வரைபடங்களில் தவறாமல் கழிப்பிடம் சேர்க்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது. இந் நகராட்சியில் உலகவங்கி உதவித்திட்டத்தின் கீழ், குறைந்த செலவிலான கழிப்பிடங்கள் கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட்டு இத்திட்டத்தின் கீழ், இதுவரை 1572 கழிப்பிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

## 35. உணவு கலப்படம்

உணவு கலப்பட தடுப்புச் சட்டத்தின் கீழ் உணவு பாதுகாப்பு அலுவலர் ஒருவரை அரசாங்கத்தால் நியமனம் செய்யப்பட்டு பணிப்புரிந்து வருகிறார். உணவு கலப்படம் சம்மந்தமாக நகராட்சியால் செய்படுத்தப்படுவதில்லை.

## 36. அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழில்

அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழில் அனைத்திற்கும் உரிமையாணை விதிக்கப்பட்டுள்ளது. இந்நகரில் மொத்தம் 938 இனங்கள் இதன் கீழ் வருகின்றன. விற்பனைப் பொருட்களுக்கும், இடத்திற்கும் தகுந்தாற்போல் நிபந்தனைகள் விதிக்கப்பட்டது. விற்பனை நிலையங்களை அடிக்கடி பொது சுகாதார பணியாளர்களால் அடிக்கடி பார்வையிடப்பட்டது. அறிக்கை ஆண்டில் இத்தலைப்பின் கீழ்,ரு.11,51,900/- தொகை வசூல் செய்யப்பட்டு உள்ளது.

## 37. பொது

இந் நகராட்சியில் பயன்தரும் இனங்கள் பேருந்து நிலையம் அங்குள்ள சிற்றுண்டி விடுதி, ஆடு, மாடு அறுக்குமிடம், பெட்டிக்கடைகள், தார்சு கடைகள் வாரச்சந்தை சாலையோரக் கடைகள், மிதிவண்டி நிலையம் ஆகும்.

## 38.போக்குவரத்து

இந்நகராட்சி சென்னை-பெங்களூார் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. மேலும், ஆம்பூர் நகரத்தில் புகைவண்டி நிலையம் அமையப் பெற்று புகை வண்டிகள் நின்று செல்கின்றன.

## 39. நகரமைப்பு பிரிவு

நகரமைப்பு பிரிவில் அறிக்கை ஆண்டில் திரு.ஆர்.திருமுருகன், 1.04.2014 முதல் 21.02.2014வரை நகரமைப்பு ஆய்வாளராக பணியாற்றி வந்தார். 22.02.2014 முதல் நகரமைப்பு ஆய்வாளர் பணியிடம் காலியாக உள்ளது. நகரளவு பதிவேடுகள் மற்றும் வரைபடங்கள் அனைத்தும் நகரளவரால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இந் நகராட்சியில் ஐந்து விரிவு மேம்பாட்டு திட்டங்களும், நகராட்சி எல்லை முழுவதற்கும் ஒரு முழுமை திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### முழுமைத்திட்டம்

1971ம் வருடத்திய தமிழ்நாடு நகரமைப்பு சட்டம் 28வது பிரிவின் கீழ், தமிழ்நாடு அரசு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறையின் 25.1.90ம் தேதிய அரசாணை எண்.93ல் ஆம்பூர் உள்ளூர் திட்டக்குழுமப் பகுதிக்கான முழுமை திட்டத்திற்கு அரசின் ஏற்பளிப்பு வழங்கப்பட்டுள்ளதை மேற்படி சட்டம் பிரிவு 3(1)ன்படி 28.2.90ம் தேதிய தமிழ்நாடு அரசிதழில் (பாகம் 11, பிரிவு.2,பகுதி 115) பிரசுரிக்கப்பட்டு உள்ளது. மேற்படி சட்டம்
பிரிவு 30(2)ன் கீழ், அரசிதழில் பிரசுரம் வெளியிடப்பட்ட நாளிலிருந்து, ஆம்பூர் முழுமைத்திட்ட செயல்முறைக்கு வந்ததை 15.7.90ம் தேதிய தினகரன் தினசரிநாளிதழில் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.முழுமைத்திட்டம் செயல்முறைக்கு வந்துள்ளதை ஜீலை.90 மாவட்ட அரசிதழில் துணை வெளியீடாக வெளியிடப்பட்டது.

மேற்படி முழுமை திட்டம் தயாரிக்கப்பட்டு ஐந்து வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதால் நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், அலுவலகத்தால் மறு ஆய்வு செய்து அரசின் இணக்கத்திற்கு அனுப்பப்பட்டது. அரசாணை எண்.360, நாள்.23.8.99ல் முழுமை திட்டத்திற்கு அரசின்

இணக்கமும், பெறப்பட்டது. அரசின் இணக்கம் பெற்ற முழுமை திட்டத்தை தமிழ்நாடு அரசிதழில், மாவட்ட அரசிதழில் தமிழ் தினசரி நாளிதழ் மற்றும் அலுவலக விளம்பர பலகைகள் ஆகியவற்றில் பொதுமக்களின் ஆலோசனை மற்றும் ஆட்சேபணைகள் **கோரி** விளம்பரப்படுத்தப்பட்டது.அரசாணை எண்.251, நாள்.2.11.10-ல் முழுமை திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

**<u>விரிவு மேம்பாட்டு திட்டம் எண்.1</u>**

நகர் ஊரமைப்பு இயக்குனர், சென்னை அவர்களின் 20.2.95ம் தேதிய ந.க.எண். 4445/95/டிபி3 செயல்முறையில் விரிவு மேம்பாட்டு திட்டம் எண்.1, அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (வரைபடம் எண்.டி.டி.பி/வி.ஆர்.டிடிசிபிஎண்.25/95) சில பகுதிகளுக்கு கட்டட விதிகள் மட்டும் பொருந்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>விரிவு மேம்பாட்டு திட்டம் எண்.2</u>**

நகர் ஊரமைப்பு இயக்குனர், சென்னை அவர்களின் 20.2.95ம் தேதிய ந.க.எண். 4442/95/டிபி3 செயல்முறையில் விரிவு மேம்பாட்டு திட்டம் எண்.2, அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (வரைபடம் எண்.டி.டி.பி/வி.ஆர்.டிடிசிபிஎண்.22/95)சில பகுதிகளுக்கு கட்டட விதிகள் மட்டும் பொருந்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>விரிவு மேம்பாட்டு திட்டம் எண்.3</u>**

நகர் ஊரமைப்பு இயக்குனர், சென்னை அவர்களின் 20.2.95ம் தேதிய ந.க.எண். 3816/95/டிபி3 செயல்முறையில் விரிவு மேம்பாட்டு திட்டம் எண்.3 அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (வரைபடம் எண்.டி.டி.பி/வி.ஆர்.டிடிசிபிஎண்.24/95)சில பகுதிகளுக்கு கட்டட விதிகள் மட்டும் பொருந்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>விரிவு மேம்பாட்டு திட்டம் எண்.4</u>**

நகர் ஊரமைப்பு இயக்குனர், சென்னை அவர்களால் விரிவு மேம்பாட்டு திட்டம் எண்.4க்கு ஒப்புதல் வழங்கப்பட்டு திட்ட வரைபடத்துக்கு அ.தி/வேம/ந.ஊ.இ.எண்29/95) என தெரிவிக்கப்பட்டுள்ளது. திட்டவிதிகள் கடை பிடிக்கப்பட்டு திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

**<u>விரிவு மேம்பாட்டு திட்டம் எண்.5</u>**

நகர்ஊரமைப்பு இயக்குனர், சென்னை அவர்களின் 27.3.95ம் தேதிய ந.க.எண். 4443/95/டிபி3 செயல்முறையில்விரிவு மேம்பாட்டு திட்டம் எண்.5ல் அங்கீகரிக்கப்பட்டுள்ள வரைபடம் எண். டி.டி.பி/வி.ஆர்.டிடிசிபிஎண்.26/95, மேற்படி திட்ட விதிகள் கடை பிடிக்கப்பட்டு திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

**<u>கட்டிட விண்ணப்பஙகள்</u>**

அறிக்கை ஆண்டில் வரப்பபெற்ற மற்றும் முடிவு செய்யப்பட்ட கட்டிட விண்ணப்பங்களின் விவரம் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | அறிக்கை ஆண்டின் ஆரம்பத்தில் இருந்த விண்ணப்பங்கள் | - |
| 2. | அறிக்கை ஆண்டில் பெறப்பட்ட கட்டடட விண்ணப்பங்கள் | 116 |
| 3. | அறிக்கை ஆண்டில் முடிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் | 116 |
| 4. | அறிக்கை ஆண்டில் நிலுவையில் இருந்த விண்ணப்பங்கள் | - |

**40.(அ) ஆக்கிரமிப்புகள்**

| | |
|---|---|
| அறிக்கை ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளவை | 55 |
| இவ்வாண்டில் கண்டுபிடிக்கப்பட்டவை | 70 |
| அப்புறப்படுத்தப்பட்டவை | 80 |
| இவ்வாண்டில் உரிமையாணை வழங்கப்பட்டவை | - |
| அறிக்கை ஆண்டின் முடிவில் நிலுவையில் உள்ளவை | 45 |

**41(ஆ) நகர அளவைப்பிரிவு**

இந்நகராட்சியில் ஒரு நகரளவரும், இரண்டு புல உதவியாளர்களும், பணியில் உள்ளார்கள். நகரளவை பதிவேடுகள் மற்றும் வரைபடங்கள் யாவும் நகர அளவரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. உட்பிரிவு மற்றும் பெயர் மாற்றம் , நகர அளவு பதிவேடு மற்றும் வரைபடங்களில் பதியப்படுகிறது. உரிய கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு வருகிறது.

**42. வாரச்சந்தை**

இந்நகராட்சி வாரச்சந்தை ரெட்டி தோப்பு பேருந்து நிலையம் எதிர்புறத்தில் தேசிய நெடுஞ்சாலை ஓரமாக தற்போது பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடத்தப்பட்டு வருகிறது. மேலும், தனியார் தினசரி மார்கெட் ஒன்றும் தொடர்ந்து அறிக்கை ஆண்டில் நடைபெற்று வருகிறது.

**ஆண்டு குத்தகை மூலம் வருவாய் விவரம்:**

**1.வாரச்சந்தை**

2012-2013ம் ஆண்டில் ரூ.25,750/- வருவாய் வந்துள்ளது.
2013-2014ம் ஆண்டில் ரூ.27,038/- வருவாய் வந்துள்ளது.
2014-2015ம் ஆண்டில் ரூ.28,390/- வருவாய் வந்துள்ளது.

**2. ஆடு, மாடு அடிக்கும் தொட்டி இடம்**

ஆடு, அடிக்கும் தொட்டி ஒன்றும், மாடு அடிக்கும் தொட்டி ஒன்றும் நகராட்சியால் நடத்தப்படுகின்றன. இதன் மூலம் அறிக்கை ஆண்டில் மாடுக்கு ரூ.1,75,433/- வருவாயும், ஆடு அடிக்கும் தொட்டியில் ரூ.1,24,252/- வருவாயும் வந்துள்ளது.

**3. சாலை ஓர சுங்கம் வசூல்**

தமிழ்நாடு நகராட்சி சட்டம் 20வது பிரிவின்படி சாலை ஓரங்களில் வியாபாரம் செய்வதை ஒழுங்குபடுத்தி சுங்கம் வசூல் செய்யும் முறையே 1997-98 முதல் அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் கீழ்க்கண்டவாறு வருவாய் வந்துள்ளது.

2012-2013ம் ஆண்டில் ரூ.3,83,234/- வருவாய் வந்துள்ளது.
2013-2014ம் ஆண்டில் ரூ.4,02,396/- வருவாய் வந்துள்ளது.
2014-2015ம் ஆண்டில் ரூ.4,22,516/- வருவாய் வந்துள்ளது.

**4. பேருந்து நிலையம்**

பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு சுங்க கட்டணம் கீழ்கண்டவாறு வருவாய் வரப்பட்டது.
2012-2013ம் ஆண்டில் ரூ.9,11,570/- வருவாய் வந்துள்ளது.
2013-2014ம் ஆண்டில் ரூ.9,57,149/- வருவாய் வந்துள்ளது.
2014-2015ம் ஆண்டில் ரூ.10,05,006/-வருவாய் வந்துள்ளது.

**5. கட்டண கழிப்பிடம்**

பேருந்து நிலையத்தில் ஒரு கட்டண கழிப்பிடம் உள்ளது. 2014-2015ம் ஆண்டு கட்டண கழிப்பிடத்தின் மூலம் ரூ.2,35,384/-. சுங்கம் மூலம் வருவாய் வந்துள்ளது.

**6. மரமகசூல்**

ஆசனாம்பட்டு பகுதியில் உள்ள 13 புளியமர மகசூல், ஒட்டன் குட்டை பகுதியில் உள்ள 3 புளியமரமகசூல் மற்றும் நகராட்சி உரக்கிடங்கு பகுதியில் உள்ள 175 தென்னை மரங்கள் மூலம் 2014-2015-ம் ஆண்டு ரூ.10,155/- வருவாய் வந்துள்ளது.

**7. கடைகள்**

இந்நகராட்சிக்கு சொந்தமான சேர்மன் சம்பங்கி அங்காடியில் 57 கடைகளும், 38 இரும்பு பங்க்குகளும், வி.ஏ.கரீம் சாலையில் 9 கடைகளும், பாங்கி மார்க்கெட்டில் 22 தரை கடைகளும், பேருந்து நிலையத்தில் 39 கடைகளும், எஸ்.கே.ரோடில் 4 கடைகளும் ஆக மொத்தம் 173 கடைகளும் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. இந்த கடைகள் மூலம் மாதம் 1க்கு ரூ.1,41,428/- வருவாய் வருகிறது.
2012-2013ம் ஆண்டில் ரூ.15,34,407/- வருவாய் வந்துள்ளது.
2013-2014ம் ஆண்டில் ரூ.16,11,127/- வருவாய் வந்துள்ளது.
2014-2015ம் ஆண்டில் ரூ.16,97,136/- வருவாய் வந்துள்ளது.

**46. தொழிற்சாலைகள்**

மாவட்ட சுகாதார அலுவலர், நகரமைப்பு துணை இயக்குனர், அவர்களின் பரிந்துரைகளின்படி நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தொழிற்சாலைகளுக்கு உரிமையாணை வழங்கப்பட்டது. பொதுவாக தோல் பதனிடும் தொழிற்சாலை இந்நகரத்தில் முக்கிய தொழிற்சாலைகள் ஆகும். நகர எல்லைக்குள் அமைந்துள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இவ்வாண்டும் இயங்கியது.

## 47. தீண்டாமை

இந்நகராட்சி எல்லைக்குள் வசிக்கும் அனைவரும் மனித நேயத்துடன் பழகி வாழ்கின்றனர். எனவே தீண்டாமை என்ற வார்த்தைக்கே இடமில்லை.

## 48. சொத்துவரி

இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள எல்லா கட்டிடங்கள் மீதும் நிலங்களின் மீதும் கீழ்க்கண்டவாறு வரிகள் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | பொதுக்காரியம் அரையாண்டு வாடகை மதிப்பீடு | 4% |
| 2. | கழிப்பிட வரி | 1% |
| 3. | விளக்கு வரி | 3% |
| 4. | கல்வி வரி | 2.5% |
| 5. | தண்ணீர் வடிகால் வாரியம் | 6.5% |
| 6. | நூலக வரி | 1.45% |
| | மொத்தம் | 18.45% |

### அ. வசூலிக்கக்கூடிய சொத்துவரி

சொத்துவரி நிலுவை கேட்பு ரூ.94.19 லட்சத்தில் ரூ.50.10 இலட்சமும், வசூல் செய்யப்பட்டு 47% சதவீதம் முடிக்கப்பட்டது. சொத்துவரி நடப்பு கேட்பு ரூ.187.53 இலட்சத்தில் ரூ.156.84 இலட்சமும், வசூல் செய்யப்பட்டு 83% சதவீதம் முடிக்கப்பட்டுள்ளது.

### ஆ.அரசு கட்டிடங்கள் (சொத்துவரி)

சொத்துவரி நடப்பு கேட்பு ரூ.5.40இலட்சத்தில் ரூ.1.20 இலட்சமும், வசூலிக்கப்பட்டு 22% சதவிகிதம் முடிக்கப்பட்டது.

### இ. வழக்குகள் சொத்துவரி

| | |
|---|---|
| 1.4.14 ஆரம்ப நிலுவை வழக்குகள் | 5 |
| புதிய வழக்குகள் | - |
| மொத்த வழக்குகள் | 5 |

அறிக்கை ஆண்டில் வழக்குகள் இன்று வரையில் ரூ.27.00 இலட்சம் நிலுவையாக உள்ளது.

ஈ. தொழில்வரி

தமிழ்நாடு தொழில்வரி மீதான வியாபாரம் மற்றும் வேலை வாய்ப்புச்சட்டம் 1992ன்படி இந்நகரில் உள்ள அனைத்து வியாபாரிகள், வக்கீல், டாக்டர், பொறியர், திரைஅரங்குகள், தங்கும் விடுதி, அனைத்து அலவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் ஆகிய அனைவருக்கும் 1.4.90 முதல் தொழில்வரி வசூலிக்கப்பட்டு வருகிறது.

தொழில்வரி கேட்பு நிலுவை நிலுவை 15.55லட்சத்தில் ரூ.7.26 லட்சம் வசூலிக்கப்பட்டது.வசூல் செய்யப்பட்ட சதவீதம் 47% நடப்பு கேட்பில் ரூ.34.35 இலட்சத்தில் ரூ.30.71 இலட்சம் வசூலிக்கப்பட்டது. இது 89% ஆகும்.

49. வரி இனங்கள்

வரி இனங்கள் வசூலிக்கக்கூடிய கேட்பில் 65% சதவிகிதமும், வரியில்லா இனங்களின் கேட்பில் 87% சதவிகிதமும், வசூல் செய்யப்பட்டது. வசூல் ஆகாத நிலுவைத் தொகையையும், நடப்பு ஆண்டில் வசூல் செய்ய உரிய நடவடிக்கையும் எடுக்கப்பட்டது.

50.நிதி நிலைமை

அறிக்கை ஆண்டு மற்றும் கடந்த மூன்று ஆண்டுகள் இந்நகராட்சியில் வரவு, செலவு கணக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| வருடம் | வரவு | செலவு |
|---|---|---|
| 2012-2013 | ரூ.10,78,67,599/- | 8,92,99,207/- |
| 2013-2014 | ரூ.53,69,71,224/- | 53,43,13,689/- |
| 2014-2015 | ரூ.43,15,71,617/- | 40,47,84,514/- |

51.தணிக்கை

| | |
|---|---|
| அறிக்கை ஆண்டில் ஆரம்பத்தில் உள்ள ஆட்சேபணை | 776 |
| அறிக்கை ஆண்டில் வரப்பெற்ற தணிக்கை தடைகள் | - |
| மொத்த தணிக்கை தடைகள் | 776 |
| முடிவு செய்யப்பட்டவை | 336 |
| | - |
| அறிக்கை ஆண்டில் 31.3.2015ன் முடிவில் உள்ள ஆட்சேபணைகள | 445 |
| சத்துணவு நிதி தணிக்கை தடைகள் | 90 |

## 52. குடும்ப கட்டுப்பாட்டு திட்டம்

இத்திட்டத்தின் கீழ் அறிக்கையாண்டில் 455 அறுவை சிகிச்சை நகராட்சி மகப்பேறு உதவியாளர்களை கொண்டு செய்து முடிக்கப்பட்டது.

## 53. தடுப்பூசி விவரம்

இத்திட்டத்தின் கீழ், அறிக்கையாண்டில் கீழ் குறித்தவாறு பொது சுகாதாரத்துறையினரால் செய்து முடிக்கப்பட்டது.

| வ.எ. | இலக்கு | எண்ணிக்கை |
|---|---|---|
| 1.டி.டி.இ.எம். | 1682 | 1682 |
| 2. போலியோ | 1658 | 1652 |
| 3. பி.சி.ஜி | 1658 | 1652 |
| 4. தட்டம்மை | 1570 | 1571 |
| 5. டி.டி.5 வருடம் | 1565 | 1565 |
| 6. டி.டி.10வருடம | 1470 | 1470 |
| 7. டி.டி.16வருடம | 1470 | 1470 |
| 8. எப்.எஸ்.டி.(அயன்) | 1682 | 1682 |
| 9. வைட்டமின்.எ. | | |
| 10. பெண்டா | 1682 | 1679 |

இறுதியாக நகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர்கள் நிர்வாகம் நல்ல முறையில் நடப்பதற்கு போதிய ஒத்துழைப்பு கொடுத்ததற்கு எனது நன்றியை தெரிவித்துக்கொண்டு இவ்வறிக்கையினை சமர்ப்பிக்கிறேன்.

இடம்- ஆம்பூர் நகராட்சி. ஆணையாளர்(பொ),
நாள்: 28.10.2015 ஆம்பூர் நகராட்சி.

# ஆம்பூர் நகராட்சி

# நிர்வாக அறிக்கை

# 2014-15

<u>ஆம்பூர் நகராட்சி</u>

| வ.எண் | தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பெயர் மற்றும் விலாசம் |
|---|---|
| 1. | திருமதி.சங்கீதா பாலசுப்பிரமணி அவர்கள்<br>நகரமன்ற தலைவர்,<br>8எ, புதுகோவிந்தாபுரம், ஆம்பூர். |
| 2. | திரு.கே.நஜர் முஹமத் அவர்கள்<br>நகரமன்ற துணைத்தலைவர்,<br>26/30, சிக்கந்தர் திப்பு வீதி, ஆம்பூர். |
| 3. | திரு.கே.என். அமீன் பாஷா அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 1,<br>20, உஸ்தாக் ஷேக் அமீத் தெரு, ஆம்பூர். |
| 4. | திருமதி.எம்.எச்.பரிதா பானு அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 2,<br>28/25 ஜலால்பேட்டை 3வது தெரு, ஆம்பூர். |
| 5. | திரு.இ.சுரேஷ்பாபு அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 4,<br>17/6, மணியக்கார தெரு, கஸ்பா.எ. ஆம்பூர். |
| 6. | திரு.ஆர். பாரீதர் அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 5,<br>47,. சின்னகம்மார தெரு, கஸ்பா.எ. ஆம்பூர். |
| 7. | திரு.பி.கே.மாணிக்கம் அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 6,<br>2வது நெசவுக்கார வீதி, கஸ்பா.எ. ஆம்பூர். |
| 8. | திரு. கே.பிச்சைமுத்து அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 7,<br>புது கோவிந்தாபுரம், ஆம்பூர். |
| 9. | திருமதி. எம். ஜான்சி ராணி அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 8,<br>20, 4வது தெரு பன்னீர் செல்வம் நகர், ஆம்பூர். |
| 10. | திரு. வி.கலீல் அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 9,<br>31/57, 4வது தெரு, கே.எம்.நகர், ஆம்பூர். |
| 11. | திரு.டி.நாகராஜன் அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 10<br>24 /61, வாணக்கார கொல்லை 1வது தெரு, ஆம்பூர். |
| 12. | திரு.டி.ஷமீல் அஹமத் அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 11<br>537, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், ஆம்பூர். |
| 13. | திரு.கே.சீனிவாசன் அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 12<br>26,குமரேசன் தெரு, கஸ்பா.பி.ஆம்பூர். |

| | |
|---|---|
| 14. | திரு.எ.சரவணன் அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 13<br>முக்கியம்மன் கோவில் தெரு, கஸ்பா.பி.ஆம்பூர். |
| 15. | திருமதி.லட்சுமி சீதாராமன் அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 14<br>10/21, ஜங்காச்சாரி தெரு, ஆம்பூர். |
| 16. | திருமதி. எஸ். ஷமீம் பானு அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 15<br>3, சுண்ணாம்புக்காளை 3வது தெரு, ஈத்காரோடு, ஆம்பூர். |
| 17. | திரு.அகீல் அஹமத் அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 16<br>1/1, பாங்கிகான் தெரு முதல் சந்து, ஆம்பூர். |
| 18. | திரு.எஸ்.பிலால் பாஷா அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 17<br>36/100, ஓ.வி.ரோடு, ஆம்பூர். |
| 19. | திரு.பி.ஆர்.சி.சீனிவாசன்,<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 18<br>3, காளியம்மன் கோவில் தெரு கிருஷ்ணாபுரம்,<br>ஆம்பூர். |
| 20. | திருமதி.மஞ்சுளா ஸ்ரீனிவாசன் அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 19<br>12/23, புதுதெரு, கிருஷ்ணாபுரம், ஆம்பூர். |
| 21. | திரு.இலியாஸ் அஹமத் அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 20<br>45/18ஏ, பட்டாணி முசாமியான் தெரு, ஆம்பூர். |
| 22. | திருமதி.எம்.சசிகலா அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 21,<br>23/6, பர்ணக்கார 2வது தெரு,ஆம்பூர். |
| 23. | திரு.அதிகுல்லா அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 22,<br>30/16,காதர்பேட்டை 3வது தெரு,ரஹமான் நகர்,<br>ஆம்பூர். |
| 24. | திரு.ஏ. ஜமீல் அஹமத் அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 23,<br>9/23,வாணக்கார கொல்லை முதல் தெரு,ஆம்பூர். |
| 25. | திரு.கே.இக்பால் அஹமத் அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 24,<br>17,நீலிக்கொல்லை மசூதி தெரு, ஆம்பூர். |
| 26. | திருமதி.எம்.பி. சிராஜின்னிசா நூருல்லா அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 25,<br>18/5எ,முஹமத்புறாமசூதி முதல் தெருமுதல்சந்து,ஆம்பூர். |

| | |
|---|---|
| 27. | திரு.எஸ். ஆசிப்கான் அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 26,<br>32/16,சந்தமியான் கொல்லை 2வது தெரு,ஆம்பூர். |
| 28. | திருமதி.டி. ரத்தினா அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 27,<br>2வது தெரு சாமிபிள்ளை நகர்,புதுமண்டி,ஆம்பூர். |
| 29. | திரு.கே. சுதாகர் அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 28,<br>47, பிள்ளையார் கோவில் வீதி, நடராஜபுரம், ஆம்பூர். |
| 30. | திரு.எஸ்.கணேசன் அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 29,<br>2வது தெரு லட்சுமி நகர் ஆம்பூர். |
| 31. | திருமதி.எம்.விமலா அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 30,<br>36/ 40 பெத்லகேம் 3வது தெரு, ஆம்பூர். |
| 32. | திரு.அ.காசிநாதன் அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 31,<br>22, பெத்லகேம் 7வது தெரு, ஆம்பூர் |
| 33. | திரு.எஸ்.அன்பு (எ) அறிவழகன், அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 32,<br>52எ. எம்.சி.ரோடு, சான்றோர்குப்பம், ஆம்பூர் |
| 34. | திருமதி.எஸ்.சுகுணா அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 33,<br>3வது வீதி, பெரியார் தெரு, சான்றோர்குப்பம், ஆம்பூர் |
| 35. | திருமதி.வி.உஷாராணி அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 34,<br>23/8, சுந்தரவிநாயகர் கோவில் தெரு, சாணாங்குப்பம், ஆம்பூர். |
| 36. | திரு.பி.நிர்மலா பாஸ்கர் அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 35,<br>37/18, சாது வீதி, கிருஷ்ணாபுரம், ஆம்பூர். |
| 37. | திரு.கே.மணி அவர்கள்<br>நகரமன்ற உறுப்பினர், வார்டு எண் 36,<br>8 இந்திராநகர் முதல் தெரு, ஆம்பூர். |

<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை</u>

| விடுநர் | பெறுநர் |
|---|---|
| திரு.எல்.குமார்.பி.இ.,<br>பொறியாளர் (ம) ஆணையாளர் (பொ)<br>ஆம்பூர் நகராட்சி<br>635 802. | நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குனர்,<br>காகிதப்பட்டடை<br>வேலூர்.12. |

ந.க.எண். /2014/சி1, நாள்: .10.2015.

ஐயா

பொருள்: ஆம்பூர் நகராட்சி – நிர்வாக அறிக்கை 2014-2015ம் ஆண்டு சமர்ப்பித்தல் - தொடர்பாக.

...................................

ஆம்பூர் நகராட்சியின் 2014-2015ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கையினை நகரமன்ற தீர்மான ஒப்புதலுடன் இத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுகிறது.

ஆணையாளர் ,
ஆம்பூர் நகராட்சி.

இணைப்பு: 1. நகரமன்ற தீர்மான நகல்.
2. நிர்வாக அறிக்கை 2014-15

**நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.**

1. மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர்.9.

2. நகராட்சிகளின் நிர்வாக ஆணையாளர், சென்னை.5.

## மன்றப்பொருள்

ஆம்பூர் நகராட்சியின் 2014-2015ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம்.

ந.க.எண். /2015/சி1

நகரமன்ற தீர்மான எண்.200, நாள்: 30.10.2014-ன் உண்மைநகல்:

ஆம்பூர் நகராட்சியின் 2013-2014-ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2317/2012/சி1

நகரமன்ற தீர்மான எண்.200, நாள்: 30.10.2014

அங்கீகரிக்கப்பட்டது.

ஒம்/-சங்கீதா பாலசுப்பிரமணி
தலைவர்
நகரமன்றம், ஆம்பூர்.

/ உண்மைநகல்/

ஆணையாளர்,
ஆம்பூர் நகராட்சி.